
# தமிழர் பண்பாட்டு வரலாறு

(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கோவை)

**தொகுதி-1**

கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்
முனைவர் மு. மகாலட்சுமி

பதிப்பாசிரியர்கள்
முனைவர் மு.மகாலட்சுமி
முனைவர் சா.விஜயலட்சுமி
முனைவர் கோ.ஜெயசித்ரா



வெளியீடு
தமிழ்த்துறை
கொ. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி
கடலூர் - 607001

# தமிழர் பண்பாட்டு வரலாறு

*பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கோவை*

**(தொகுதி – 1)**


கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்

**முனைவர் மு. மகாலட்சுமி**

தமிழ்த்துறைத் தலைவர்

*பதிப்பாசிரியர்கள்*

**முனைவர் மு. மகாலட்சுமி**

**முனைவர் சா. விஜயலட்சுமி**

**முனைவர் கோ. ஜெயசித்ரா**



வெளியீடு

**தமிழ்த்துறை**

கொ. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி

கடலூர் – 607 001

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தமிழர் பண்பாட்டு வரலாறு (தொகுதி – 1) |
| ஆசிரியர்கள் | : | முனைவர் மு. மகாலட்சுமி<br>முனைவர் சா. விஜயலட்சுமி<br>முனைவர் கோ. ஜெயசித்ரா |
| முதற்பதிப்பு | : | செப்டம்பர் 27, 2025 |
| வெளியீட்டு எண். | : | தமிழ்த்துறை வெளியீடு – 01 |
| மொழி | : | தமிழ் |
| நூல் அளவு | : | டெம்மி |
| பக்கங்கள் | : | 274 |
| அட்டை வடிவமைப்பு | : | zocolours, 7695985060 |
| பதிப்பகம் | : | தமிழ்ச்சுரபி பதிப்பகம்<br>51/24 ஈஸ்வரதாஸ் தெரு<br>திருவல்லிக்கேணி<br>சென்னை – 600005<br>தொடர்புக்கு: 7904033924<br>Email : thamizhsurabi@gmail.com |

ISBN No : 978-81-989029-0-0

விலை : **300.00**

25. சங்ககால அக வாழ்வியலும்; தற்கால அக வாழ்வியலும் 189

**முனைவர் பா. முத்துச்சாமி**

26. தமிழ் இலக்கியங்களில் பரத்தமை 196

**முனைவர் தெ. மேகநாதன்**

27. விவிலியத்தின் நீதிமொழிகளும் திருக்குறளின் அறக்கருத்துகளும் 205

**சு. ரஞ்சித்குமார்**

28. நாலடியாரில் குடும்ப உறவுகள் 211

**முனைவர் ரா. ராஜா**

29. பல்லவர் காலக் கலைகள் 216

**திருமதி செ. லதா**

30. "Reshaping Justice: British-Era Social Reforms and the Rise of Dr. Ramadoss' Movement for Social Empowerment in Tamil Nadu" 221

**D. Vasanthakumari, T. Chandrasekar**

31. "தமிழரின் உடன்போக்குப் பண்பாடு" (பாலைக்கலியை முன்வைத்து) 233

**முதுமுனைவர் க. விஜயகாந்த்**

32. "தமிழர் வழிபாட்டு முறைமையில் வள்ளலாரின் இடையீடும் – மேம்பாடும்" 240

**முனைவர் சா. விஜயலட்சுமி**

33. பரிபாடலில் தொன்மக்கூறுகள் 249

**முனைவர் த. க. ஜாஸ்மின் சுதா**

34. சிலப்பதிகாரத்தில் சமயமும் விழுமியங்களும் 255

**க. ஜெகதீஸ்வரன்**

35. கிராம – நகர மக்களின் உணவு முறையின் மீட்டுருவாக்கம் 260

**முனைவர் கோ. ஜெயசித்ரா**

# நாலடியாரில் குடும்ப உறவுகள்

முனைவர் ரா. ராஜா,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
பல்லாவரம், சென்னை -600117
9080348727
rokithraja1984@gmail.com

**முன்னுரை**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் தொகுப்பில் நானூறு சமண முனிவர்களால் இயற்றப்பட்ட தனிப்பாடல்களின் தொகுப்பாகக் கருதப்படும் நீதி நூலான நாலடியாரில் தமிழ்ச் சமூகம் மட்டுமின்றி உலகில் உள்ள அனைத்து பெருமக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு அறக்கருத்துகள் பொதிந்து காணப்படும் நூலாக நாலடியார் திகழ்கின்றது. திருக்குறளை அடுத்து ஒப்ப வைத்துப் போற்றப்படும் உயரிய நீதி நூலாகவும் பெருமை பெற்றுள்ளது. நாலடியாரில் கல்வியின் முக்கியத்துவம், நல்லொழுக்கம், பற்றற்ற நிலை, அருள் உள்ளம், எளிமையான வாழ்க்கை, உறவுகளின் சிறப்பு போன்ற கருத்துக்களை வலியுறுத்துகிறது. அவ்வகையில் நாலடியாரில் உள்ள இருபத்தியோராவது அதிகாரமான 'சுற்றம் தழால்', என்னும் அதிகாரத்தில் கூறப்பெற்றுள்ள சுற்றத்தாரின் சிறப்புகளையும் உறவினர்களுடன் ஒற்றுமையாக வாழ வேண்டியதன் அவசியத்தையும் இவ்வதிகாரத்தில் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கப்பெற்றுள்ளது. அவ்வகையில் சுற்றத்தாரின் பண்பு நலன்களையும் உறவினரைப் பேணி பாதுகாப்பதன் இன்றியமையாமைக் குறித்தும் சுற்றம் தழால் என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ள பத்துப் பாடல்களின் வழியே ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

துன்பத்தால் வாடும் மக்களைச் சார்ந்து அவர்தம் துயரத்தைக் களைபவரே யாவர்க்கும் தலைவர்கும் தன்மையுடையவர் ஆவர்.

**பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்கல்**
**அக்காரம் பாலோடு அமரார்கைத்து உண்டலின்**
**உப்பிலிப் புற்கை உயிர்போல் கிளைஞர்மாட்டு**
**எக்காலத் தானும் இனிது.** (நாலடியார், 206)

பொற்கலத்தில் இட்ட, புலிநகம் போன்ற வெண்மையான சோற்றைச் சர்க்கரையுடன் பாலும் கலந்து பகைவர் தர, அதைப் பெற்று உண்பதைவிட, உப்பில்லாத புல்லாரிசிக் கூழை, உயிர்போன்ற சுற்றத்தாரிடத்திலே பெற்று, எந்தக் காலத்திலும் இட்டு உண்ணல் இனிதாம்.

## துணை நிற்றலில் சுற்றத்தார்

நல்ல அன்புள்ள சுற்றத்தார் என்போர் தம் உறவினர்களுக்கு ஒரு துன்பம் வந்த காலத்து எவ்வாறு துணை நிற்பர் என்பதைப் பின்வரும் பாடல் எடுத்துரைக்கின்றது.

**முட்டிகை போல முனியாது வைகலும்**
**கொட்டியுண் பாரும் குறடுபோற் கைவிடுவர்;**
**சூட்டுக்கோல் போல எரியும் புகுவரே**
**நட்டார் எனப்படு வார்.** (நாலடியார், 208)

சம்மட்டி போல, வெறுக்காமல் இருக்கும்படி நாள்தோறும் நெருங்கி இதமாக வாங்கி உண்பவர்களும், காலம் வாய்த்தால் (நெருப்பிலே இரும்பைப் போட்டு விட்டு மீளும்) குறடு போல் கைவிட்டுப் போவார். ஆனால் அன்புள்ள உறவினரோ, பொருளுடன் நெருப்பை அடையும் சூட்டுக்கோலைப் போன்று (சுற்றத்தார்க்குத் துன்பம் நேர்ந்தபோது) நெருப்பிலும் மூழ்குவர்.

தாம் வாழும் காலத்திலேயே நம் உறவினர்களுடன் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதனை கூறும்விடத்து

**நறுமலர்த் தண் கோதாய்! நட்டார்க்கு நட்டார்**
**மறுமையும் செய்வதொன் றுண்டோ ! – இறுமளவும்**
**இன்புறுவ இன்புற்று எழீஇ அவரோடு**
**துன்புறுவ துன்புறாக் கால்.** (நாலடியார், 209)



நறுமண மலர்களால் கட்டிய குளிர்ந்த மாலையுடையவளே! உறவினர்க்கு உறவினராவார், சாகும் வரை அவர் இன்புறுங்கால் இன்புற்று, அவர் துன்புறுங்கால் அவரோடு சேர்ந்து தாமும் துன்புறாவிடில், மறுபிறப்பிலே போய் அவர்களுக்கு உதவுவதும் உண்டோ? (சுற்றத்தார் சமமாக இன்ப துன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்பது கருத்து). இறுதியாக தன்னை மதியாதார் உறவினரிடத்து பெறும் உணவு எத்தகைய இழிவானது என்பதை உணர்த்துகையில்,

**விரம்பிலார் இல்லத்து வேறிருந்து உண்ணும்**
**வெருக்குக்கண் வெங்கருணை வேம்பாம்; – விருப்புடைத்**
**தன்போல்வார் இல்லுள் தயங்குநீர்த் தண்புற்கை**
**என்போடு இயைந்த அமிழ்து.** (நாலடியார், 210)

தன்னை விரும்பாதார் வீட்டிலே தனித்திருந்து உண்ணும், பூனைக்கண் போன்ற நிறமுள்ள, வெம்மையான பொரிக்கறி உணவும் வேம்பாகும். ஆனால் தன்னிடம் விருப்பம் கொண்டவர் வீட்டில் உண்ணப்படும் தெளிந்த நீருடன் கூடிய குளிர்ச்சியான புல்லரிசிக் கூழும் உடம்புக்குப் பொருந்தும் அமிழ்தம் ஆகும்.

## முடிவுரை

திருக்குறளைப் போன்றே அறத்தைக் கூறுவதில் நாலடியார் தனிச் சிறப்புற்று விளங்குவதை மேற்கண்ட சுற்றந்தழால் என்னும் அதிகாரப் பகுதியின் வழியே அறிய முடிந்தது. கூட்டுக் குடும்பமாக ஒன்றாகக் கூடி வாழ்ந்த தமிழ்ச் சமூகம் இன்று அறிவியல் தொழில் நுட்பம் விஞ்ஞான வளர்ச்சி என்ற முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருப்பினும் அனைவரும் ஒன்றாகக் கூடி வாழாது நல்மொழி கூறாது ஒரே வீட்டில் தனித்து வாழும் நாகரிக மனநிலையில் இருந்து நாம் இனியாவது வெளியேறுவோம் சுற்றத்தாரைப் பேணி பாதுகாப்போம்!